Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.772/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்வநாயகம் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | விருமாண்டி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of January 2026.

20.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு நானும், சார்பு ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் தலைமை காவலர் 313 முருகன் ஆகியோர் சேர்ந்து வன்னியம்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்றபோது நூர்சாகிபுரம் செல்வம் காட்டு அருகில் பனைமரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியவரை மீண்டும் விசாரித்ததில் திருவில்லிபுத்தூர் தாலுகா இனாம் கரிசல்குளம் வடக்குத்தெருவை சேர்ந்த மாடசாமி மகன் பெரியசாமி என்பவர் கையில் 5 லிட்டர் வெள்ளை கலர் கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் வைத்திருந்தார். மேற்படி பனங்கள் எதற்கு என விசாரித்தபோது நான் குடிப்பதற்காக பனங்கள் இறக்கினேன் என்று கூறினார். அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்காக காலை 09.15 மணிக்கு கைது செய்து அதே இடத்தில்அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். காவல் ஆய்வாளர் அவர்கள் வாய்மொழி உத்தரவின்பேரில் அதே இடத்தில்

பனங்கள்ளை ஊற்றி அழித்தோம். வெள்ளை கேனை உடைத்தும் அதே இடத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டோம். எதிரி பெரியசாமியை கைது செய்து நிலையம் கொண்டுவந்தோம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

இவ்வழக்கில் நாங்கள் ரோந்து பணிக்காக நூர்சாகிபுரம் சென்றோம் என்றால் சரிதான். நூர்சாகிபுரம் வன்னியம்பட்டி காவல்நியைத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். வண்டியில் சென்றால் மேற்படி நூர்சாகிபுரத்திற்கு அரை மணிநேரத்தில் சென்றுவிடலாம் என்றால் 20 நிமிடங்களில் சென்று விடலாம். மேற்படி செல்வம் என்பவரது காடானது நூர்சாகிபுரத்திலுள்ள ஒரு பழைமையான பாழடைந்த கல்லூரி அருகே உள்ளது.

மேற்படி இடத்தில் அதிகமாக பனை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் எந்த மரத்திலிருந்து எதிரி பனங்கள் இறக்கினார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியும் எனது வாக்குமூலத்தில் எந்த மரம் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியை சோதனை செய்வதற்கு முன் சோதனை சம்மதக்கடிதம் பெறப்படவில்லை என்றால் எதிரியை நாங்கள் சோதனை செய்யவில்லை அதனால் மேற்படி கடிதம் பெறப்படவில்லை.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்கள்ளை ஆய்விற்கு அனுப்புவதற்காக மாதிரிகள் எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அத்தாட்சியிலும் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் உத்தரவின்பேரில் பனங்கள்ளை அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் ஆய்வாளரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறாமல் எதிரி மீது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்தது தொடர்பாக யாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் அவரது தம்பி சுடலைக்கனி என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அது சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில்

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரியை கைது நடைமுறைகள் பின்பற்றி கைது செய்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பனங்கள்ளின் மாதிரிகள் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி செல்வம் என்பவரின் காட்டின் அருகே விவசாயம் நிலம் உள்ளது என்றாலும் அதில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரிதான். மேற்படி விவசாயம் நிலத்தில் வேலை செய்பவர்கள் அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து பெறவில்லை என்றால் சம்பவ சமயத்தில் அங்கு யாரும் இல்லாததால் அவர்களிடம் கையெழுத்து பெறப்படவில்லை.

அத்தாட்சியில் எதிரி பனங்கள்ளை இறக்கி குடிப்பதற்காக வைத்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் கொடுத்த 180(3) BNSS வாக்குமூலத்தில் எதிரி விற்பனை செய்வதற்காக பனங்கள்ளை வைத்திருந்ததாக கூறியுள்ளேன் என்றால் எதிரி குடிக்கவும் வைத்திருந்தார் விற்பனைக்காகவும் வைத்திருந்தார். மேற்படி நான் கூறியவாறு ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவரத்திற்காக எதிரிமீது இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

உண்மையில் மேற்படி நான் கூறியவாறு ரோந்து பணிக்கு சென்று எதிரியிடமிருந்து பனங்கள்ளை கைப்பற்றியிருந்தால் அதன் மாதிரிகளை எடுத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்போம் என்றால் மேற்படி பனங்கள்ளானது விஷத்தன்மையுடையது இல்லை என்பதால் மாதிரிகள் எடுத்து ஆய்விற்கு அனுப்பப்படவில்லை. எனது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.